TAMILNADU

LAND SURVEY

— TAMIL EDITION —

Verified RealStore ™

தமிழ் நாட்டின் நில அளவை வரலாறு

19 ஆம் நூற்றாண்டின் முதல் காலாண்டில் மெட்ராஸ் மாகாணத்தில் நில அளவை மற்றும் பதிவு மேற்கொள்ளப்பட்டது.

அந்த சமயத்தில் தயாரிக்கப்பட்ட தரவுகள் 'பைமாஷ்' என்று அழைக்கப்பட்டது. நிலங்களின் நிலை மற்றும் அந்த நிலத்தை பயன்படுத்துவதற்கான சட்டப்பூர்வ உரிமை ஆகியவை அந்த தரவில் பதிவாகியிருக்கும். குறிப்பிட்ட ஒரு இடத்திலிருந்து, வடக்கு திசை காட்டும் திசைமானியின் நான்கு திசைகளிலும் எவ்வளவு தூரம் என்று கணக்கிட்டு அதன் அடிப்படையில் நிலத்தின் தோராயமான அளவுகள் ஆகியவையும் அதில் இடம்பெற்றிருக்கும். 'கஸ்ரா' என்ற "அளவைக் கணக்கிடும் முறையில் வடக்கு தெற்கு அளவுகளின் சராசரியும், கிழக்கு மற்றும் மேற்கு அளவுகளின் சராசரியும், பெருக்கப்படும். பைமாஷ் முறை அளவுகள் துல்லியமானதாக இல்லாததாலும் எல்லைகளை குறிக்க போதுமான தகவல் இல்லாததாலும் அவற்றின் அடிப்படையில் படங்கள் வரையப்படவில்லை.

இந்தியாவில். தஞ்சையை ஆண்ட முதல் ராஜ ராஜ சோழன் –அருள் மொழித் தேவன் (985 – 1014 கி.பி.) காலத்தில் முதல் முறையாக கடாஸ்ட்ரல் நில அளவை முறை மேற்கொள்ளப்பட்டது.

இன்றைய காலகட்டத்தில், மெட்ராஸ் மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்த தமிழ்நாட்டில்தான் முதன் முதலில் த க்ரேட் ஆர்க் (The Great Arc) அல்லது த க்ரேட் முக்கோணவியல் அளவை என்று அழைக்கப்படும் அளவைமுறை பிரிட்டிஷ்காரர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை உள்ள தூரம் 2400 கி.மீ. என கண்டறியப்பட்டது. 19ஆவது நூற்றாண்டிலேயே இந்திய நிலஅளவைத் துறையில் செய்யப்பட்ட மிகப்பெரிய அறிவியல் பரிசோதனை என்று இது அழைக்கப்படுகிறது. இந்த க்ரேட் முக்கோணவியல் அளவை 10 ஏப்ரல் 1802 அன்று மெட்ராஸில் உள்ள புனித தோமையார் குன்றை அடிப்படையாகவும் ஆரம்பமாகவும் வைத்து ஆரம்பித்து, நாடு முழுவதும் அளந்து மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கு வர 62 ஆண்டுகள் ஆனது. இதன் அடிப்படைகோட்டின் அளவு பெரும்பாக்கம் குன்று வரை ஏழரை மைல் அல்லது 13கி.மீ நீளம் நீண்டதாகும்.

1853ல் மெட்ராஸ் அரசின் உத்தரவின் அடிப்படையில் சோதனை முறையில் வருவாய் நிலஅளவை தென்னாற்காடு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அடுத்த இரண்டு ஆண்டுகள் முழு மாகாணத்தையும் அளவை செய்வது சம்பந்தமாக கலந்தாலோசிக்கப்பட்டு மெட்ராஸ் அரசால் அளிக்கப்பட்ட திட்டத்தை உச்ச அரசின் பரிந்துரையின் பேரில் டிசம்பர் 1856ல் இயக்குனர்கள் குழு ஒப்புதல் அளித்தது. சிறிது காலத்தில் வருவாய் நிலஅளவை கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டு 1858ல் மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வருவாய் நிலஅளவை அல்லது கடாஸ்ட்ரல் சர்வே ஆரம்பிக்கப்பட்டது

(Introduction to T.N. Survey Manual – Volume I
Preface to the Tamilnadu Survey Manual – Volume –I)

Verified RedEscote™

வ.எண்	பொருளடக்கம்	பக்க எண்
1)	நிலஅளவைக்கு தேவையான உபகரணங்கள்	3
2)	தர அளவு கோல்	4,5
3)	ஸ்தல அளவு	5
4)	வருவாய் நிலஅளவை	5
5)	வருவாய் நிலஅளவையின் அவசியம் / நோக்கம்	6
6)	வருவாய் நிலஅளவையினால் அரசுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்படும் நன்மைகள்	6,7
7)	ஒரு கிராமத்தை நிலஅளவை செய்யும் போது மேற்கொள்ளும் பணிகள்	7
8)	ஆரம்ப வருவாய் நிலஅளவை முடிவுற்ற பின்னர் பராமரிப்பு பணிக்காக வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வழங்கப்படும் ஆவணங்கள்	8
9)	நிலஅளவை குறிகளின் வகைகள்	9
10)	நிலஅளவை முறையின் வகைகள் மற்றும் சாதாரண முக்கோண முறைக்கும் மூலைவிட்ட முக்கோண முறைக்கும் உள்ள வேறுபாடு	10,11
11)	நிலஅளவை துறையில் உள்ள நிலஅளவை திட்டங்கள்	12,13
12)	தமிழ்நாடு நிலஅளவை மற்றும் எல்லைகள் சட்டம் பிரிவு	13,14,15
13)	வட்ட அலுவலகத்தல் பராமரிக்கப்படும் வட்ட கணக்கு	15,16
14)	நத்தம் மனை பட்டாவில் உட்பிரிவு செய்து தரக்கோரி பெறப்படும் மனு மீது வட்ட அலுவலகத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள்	17
15)	"Tie Line" அல்லது முடிச்சு அளவு அல்லது கற்காண் கோடுகள்	17,18
16)	நத்தம் நிலஅளவை	18
17)	கிராமத்தை நிலஅளவை செய்யும் போது புலங்கள் அமைக்கும் முறை மற்றும் எல்லைகளை சரி சமன் செய்ய வேண்டிய விதிமுறைகள்	18,19
18)	கிராம மாறுதல் பதிவேடு	20
19)	சிறு சுற்றுப்புலம்	20
20)	பராமரிப்பு பணியில் கிராம நிர்வாக அலுவலரது கடமைகள்	20,21
21)	உட்பிரிவு எண் கொடுக்கும் முறை	21
22)	கண்டம்	21
23)	கிராம கல்கிடங்கு பதிவேடு / வட்டகல் கிடங்கு பதிவேடு	22
24)	கல் பதிவேடு	22
25)	கைவிடப்பட்ட கற்கள்	23
26)	வருவாய் புலம்	23
27)	நிலஅளவை பிழைகள் மற்றும் பராமரிப்பின் போது காணப்படும் பிழைகள்	23,24
28)	நீண்ட குறுகிய புலம்	24
29)	காட்டுத்தூண்	24
30)	இணையதள வழி பட்டா மாற்றம்	25
31)	மாதிரி உட்பிரிவு கோப்பு	26 to 31
32)	பரப்பு கணித்தல்	32 to 36

Verified Real Estate

1) நிலஅளவைக்கு தேவையான உபகரணங்கள்

1. சங்கிலி (or) மெட்ரிக் சங்கிலி:

இது துத்தநாக கம்பிகள் மற்றும் வளையங்களால் ஆன 100 சம பாகங்களைக் கொண்ட 100 லிங்க்ஸ்களை உடையது. இரு முனைகளிலும் உள்ள வளையத்துடன் பித்தளையால் ஆன கைப்பிடி இணைக்கப்பட்டிருக்கும். சங்கிலியின் ஒரு பக்க கைப்பிடியிலிருந்து முறையே 25-வது லிங்க்ஸ் (or) 5.0 மீட்டர் 75-வது லிங்க்ஸ் (15.0) மீட்டரில் ஒரு பல் தாலியும், இரு பக்க கைபிடியிலிருந்து 50-வது லிங்க்ஸ் (10.0 மீட்டரில்) இருபல் தாலியும் மற்றும் ஒவ்வொரு 5-லிங்க்ஸ்களுக்கும் (1.0 மீட்டரில்) சிறிய பித்தளை வளையங்களும் இணைக்கப்பட்டிருக்கும். இவற்றின் உதவியால் அளவுகளை அறிந்து கொள்ள முடியும். ஒவ்வொரு லிங்க்ஸ்உடன் சிறு வளையங்கள் பொருத்தப்பட்டிருப்பதால் சங்கிலியை மடித்துக் கட்ட எளிதாக உள்ளது. ஒவ்வொரு லிங்க்ஸ்க்கும் 0.2 மீட்டர் அல்லது 20 சென்டிமீட்டர் அளவுகளைக் குறிக்கும் எந்த ஒரு முனையிலிருந்தும் அளவுகளை எளிதில் தெரிந்து கொள்ளும்படி அமைக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும். மேலும் அளந்த லிங்க்ஸ்களை இரண்டால் பெருக்கி வந்த எண்ணின் வலதுபுறம் ஒரு ஸ்தானம் தள்ளி புள்ளி வைத்தால் கிடைக்கும் எண் மீட்டர் அளவைக் குறிக்கும்.

எ.கா அளந்த அளவுகள் 175 லிங்க்ஸ் எனில் அதற்கான மீட்டர் அளவு 175 X2 = 35.0 மீட்டர் அல்லது அளந்த லிங்க்ஸ்களை 0.2 ஆல் பெருக்கினால் நேரடியாக மீட்டர் அளவு கிடைக்கும். 175 X 0.2 = 35.0 மீட்டர்

Leader, Follower:

சங்கிலியை பயன்படுத்த ஒருகைபிடியை பிடித்து புலத்தில் முன் இழுத்து செல்பவர் Leader என்றும் சங்கிலியின் அடுத்த முனையில் உள்ள கைபிடியை பிடித்து நேர்கோட்டில் நிறுத்த வலதுபக்கம் அல்லது இடது பக்கம் நகர சைகை செய்து Leader-யை நிறுத்துபவர் Follower எனப்படும்.

(C.S & L.R manual part – I, Chapter IV, Page No: 8 Rule: 1)

2) ஊசிகள் (or) Arrows:

30 செ.மீ நீளமுள்ள துத்தநாக கம்பியானது ஒரு முனை கூர்மையாகவும் பூமியில் செலுத்தவும், மறுமுனை பூமியிலிருந்து எடுக்க வசதியாக ஒருவளையமாகவும், வளைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு சங்கிலியின் முடிவில் ஊசியை பூமியில் குத்தி நிறுத்தப்படுகிறது. Leader-ஆல் குத்தப்படும் ஊசிகளின் எண்ணிக்கை மற்றும் நிலுவையில் உள்ள லிங்க்ஸ்களை வாசித்து ஒன்றாக கணக்கிட வேண்டும்.

Verified © RealEstate™

3) நேர்கோண கட்டை (or) Cross Staff:

நேர்கோண கட்டையின் தலைபாகம் 10 X 10 X 6.5 செ.மீ அளவுகளை உடைய சதுரமான ஒரு தேக்கு மரக்கட்டையாகும். இதன் மேற்புறத்தில் 1.4 செ.மீ ஆழமுள்ள இரண்டு காடிகள் ⊞ என்ற குறி அமைப்பில் அமைக்கப்பட்டு நான்கு சமபாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாகமும் 90 கோண அளவில் அமைந்துள்ளன. இந்த கட்டையின் கீழ் பகுதியில் 1.6 செ.மீ விட்டமும் 150 செ.மீ உயரம் கொண்ட எளிதில் பூமியில் குத்தும்படியான ஒரு இரும்பு கம்பியினால் Screw மூலம் பொருத்தப்பட்டிருக்கும் இந்த அமைப்பிற்கு நேர்கோண கட்டை அல்லது Cross Staff எனப்படும்.

(C.S & L.R manual part – I, Chapter IV, Page No: 9 Rule: 3)

4) நேர்கோண கட்டையின் உபயோகம்:

(1) நேர்கோட்டின் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து செங்குத்துக்கோடு (குத்தளவு) அமைக்க பயன்படுகிறது.

(2) இரண்டு இடங்களுக்கு இடையில் உள்ள தூரத்தை நேர்க்கோட்டால் கண்டுபிடிக்க உதவுகிறது.

(3) ஏற்கனவே புலப்படத்தில் உள்ள வெட்டளவு மற்றும் குத்தளவுகளின்படி மீள பூமியில் பொருத்துவதற்கு (Refixing) நேர்கோணக்கட்டை பயன்படுகிறது.

(C.S & L.R manual part – I, Chapter IV, Page No: 13 Rule: 14)

2) தர அளவு கோல் (or) Standard Pole

10-லிங்க்ஸ் நீளமுள்ளதாய் ஒவ்வொரு லிங்க்ஸ்-ன் சரியான ஸ்தானத்தைக் குறிப்பதற்காக காடிகள் வெட்டப்பட்டிருக்கும். நேரான ஒரு தேக்கு மரத் துண்டாகும். அதன் இரு முனைகளிலும் பித்தளை வளையங்கள் போடப்பட்டிருக்கும். இதற்கு தர அளவுகோல் என்று பெயர்.

இதனால் சங்கிலியின் நீளத்தை சரிபார்க்க உபயோகிக்கப்படுகிறது. இதில் ஒவ்வொரு லிங்க்ஸ்க்கும் சரியான தூரத்தில் செதுக்கப்பட்டிருக்கிறதா என்பதை மெட்ரிக் ஸ்கேலினால் 20 செ.மீ தூரம் உள்ளதா என்பதை சோதித்து பார்க்க வேண்டும்.

(செங்குத்து அளவுகோல் அல்லது குத்தளவு கோல் அல்லது 10-லிங்க்ஸ் கோல்)

Verified RedEstate

(அ) <u>OFF Set pole</u>

இது 10-லிங்க்ஸ் நீளமுடைய மூங்கில் மரத்தால் செய்யப்பட்டு இருபக்கங்களிலும் இரும்பு வளையங்கள் போடப்பட்டிருக்கும். ஒவ்வொரு லிங்க்ஸ்ற்கும் ஒரு 'வரை'யறுக்கப்பட்டிருக்கும். இந்த அமைப்பிற்கு 10-லிங்க்ஸ் கோல் என்று பெயர்.

இதனால் கிராம நிர்வாக அலுவலர் பயிற்சாகுபடி, ஆக்கிரமிப்பு இவைகளை அளந்து குறிப்பதற்கும், உபயோகமாக உள்ளது. மேலும், 50-லிங்க்ஸ்க்கும் குறைவான குத்தளவு தூரங்களை அளப்பதற்கும் உபயோகப்படுகிறது.

(C.S & L.R manual part – I, Chapter IV, Page No: 14 Rule: 21)

3) **Topographical Survey: ஸ்தல அளவை**

ஸ்தல அளவை என்பது ஒரு நாட்டில் அமைந்துள்ள இயற்கை வளங்களை கண்டறிந்து, அவற்றின் எல்லைகளை வரையறுத்து வரைபடம் தயாரிக்கப்படுகிறது. இவ்வரைபடத்தில் காடு மற்றும் காடு சார்ந்த பகுதி, மலை மற்றும் மலை சார்ந்த பகுதி, சமவெளி பகுதி, கடல் மற்றும் கடல் சார்ந்த பகுதி, பாலைவன பகுதி ஆகியவற்றின் எல்லைகளையும், அவற்றில் அமைந்துள்ள குடியிருப்பு பகுதி, ஆறுகள், ஓடைகள், சாலைகள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றை பதிவு செய்து வரைபடம் தயாரிக்கப்படுகிறது. இதற்கு "ஸ்தல அளவை வரைபடம்" என்று பெயர். இவ்வரைபடம் ஸ்தல அளவை துறையினரால் தயாரிக்கப்பட்டு இந்திய நிலஅளவை துறைக்கு வழங்கப்படுகிறது. இந்திய நிலஅளவை துறையானது இவ்வரைபடங்களை இந்திய அரசுக்கு சமர்ப்பிக்கின்றது.

நாட்டின் சமூக பொருளாதார, அறிவியல் சார்ந்த வளர்ச்சி திட்டங்களை தீட்டவும், அவற்றை அமல்படுத்துவதற்கும் ஸ்தல அளவை வரைபடங்கள் பேருதவியாக அமைகிறது.

(T.N. Survey manual Volume – I, Introduction to the TamilNadu Survey Manual)

4) **வருவாய் நிலஅளவை (Revenue Survey)**

அரசு மற்றும் தனியாருக்கு சொந்தமான நிலங்களின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு, அதற்கான அளவுகள் அளவீடு செய்து பதிவு செய்யப்பட்டு, அதற்க்குரிய விஸ்தீரணம் கணிக்கப்பட்டு, அந்நிலத்தை அனுபவம் செய்து வரும் உடமையாளரின் பெயரை விசாரணை செய்து பதிவு செய்வதே "வருவாய் நிலஅளவை" அல்லது கடாஸ்ட்ரல் சர்வே எனப்படும்.

இதுவரை எவ்வித நிலஅளவை பணிகளும் மேற்கொள்ளப்படாத எவ்வித நிலஅளவை ஆவணங்களும் தயாரிக்கப்படாத ஓர் நிலப்பகுதியை முதன்முதலாக நிலஅளவை பணி மேற்கொள்ளப்படும்போது அதற்கு "ஆரம்ப வருவாய் நிலஅளவை" (Initial cadastral Survey) எனப்படும்.

(T.N. Survey Manual Volume –I, Chapter -1 C.S & L.R manual part – I, Chapter V, Page No: 15 Para- 1)

Verified © RealEstate ™

5) Cadastral Survey / வருவாய் நிலஅளவையின் அவசியம், நோக்கம்

தமிழ்நாடு அரசானது நில உடமையாளர்களிடமிருந்து நிலவரியை வசூலிப்பதற்கு இரயத்துவாரி முறையை பின்பற்றுகிறது. இரயத்துவாரி முறை என்பது நில உடமையாளர்கள் அரசுக்கு நேரடியாக வரி செலுத்தும் முறையாகும். மேலும் நிலம் குறித்த விவரங்கள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை தயாரித்து பேணி பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் அரசுக்கு இருக்கின்றது. நில உடமையாளர்களின் புல எல்லை பிரச்சனை மற்றும் நிலஉரிமை பிரச்சனை ஆகியவற்றை விசாரணை செய்து தீர்வு காண வேண்டிய பொறுப்பும், நில உடமையாளர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அரசுக்கு உள்ளது. எல்லாவற்றிக்கும் மேலாக அரசின் வருவாயை நிலவரி மூலம் பெறுவதற்கும் அரசானது வருவாய் நிலஅளவை / Cadastral Survey மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

(C.S & L R manual part – I, Chapter V, Page No: 15)

6) வருவாய் நிலஅளவையினால் அரசுக்கும் பொது மக்களுக்கும் ஏற்படும் நன்மைகள்

1. தனியாருக்கு சொந்தமான நிலங்களின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு விஸ்தீரணம் கணிக்கப்படுவதால் நிலஉடமையாளர்கள் தங்களுக்கு சொந்தமான நிலங்கள் குறித்த விவரங்களை எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது.
2. அரசுக்கு சொந்தமான நிலங்களின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு அளவுகள் பதிவுசெய்யப்படுவதால், அரசுத் துறைகளுக்கு தேவையான கட்டிடங்கள், அலுவலங்கள் இதர பயன்பாட்டுக்கான கட்டுமானங்கள் உருவாக வாய்ப்பு ஏற்படுகிறது.
3. தனியாருக்கு இடையே ஏற்படும் எல்லை தாவா மற்றும் நில உரிமை பிரச்சனை குறித்த உரிமையியல் நீதிமன்ற வழக்குகளில் எளிதில் தீர்வு காண வருவாய் நிலஅளவை ஆவணங்கள் ஒரு சான்று ஆவணமாக பயன்படுகிறது.
4. வருவாய் நிலஅளவையின் போது பதிவு செய்யப்படும் நிலஅளவை ஆவணங்களின் விவரப்படி எதிர்காலத்தில் கிரயம், பாக அட்டவணை, செட்டில்மெண்ட், தானம், பரிவர்த்தனை, விடுதலை மற்றும் உயில் போன்ற பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் சொத்து விபரம் சம்மந்தமான பதிவுகள் மேற்கொள்வதற்கு வருவாய் நிலஅளவை ஆவணங்கள் பேருதவியாக அமைகிறது.
5. வருவாய் நிலஅளவையின் போது அரசு புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்ட நிலங்களில் எதிர்காலத்தில் ஏற்படும் ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து அவற்றை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும் மாநில மற்றும் மத்திய அரசுத்துறைகளுக்கு புறம்போக்கு நிலங்கள் தேவைப்படின் "நில மாற்றம்" (Land Transfer) விதிகளின்படி நிலத்தை வழங்க வாய்ப்பு ஏற்படுகிறது.

Verified RealEstate

6. அரசு புறம்போக்கு நிலங்களை தனியார் நிறுவனங்கள் அல்லது அறக்கட்டளைகள் ஆகியவற்றிற்கு தேவைப்படின் "நில உரிமை மாற்றம்" என்ற சட்ட விதிமுறைகளின்படி நிலத்தை வழங்க வாய்ப்பு ஏற்படுகிறது.
7. வருவாய் நிலஅளவையின் போது அரசு புஞ்சை, அரசு நஞ்சை என வகைப்படுத்தப்பட்ட தரிசு நிலங்களை எதிர்காலத்தில் நிலமற்ற ஏழைகளுக்கு இலவச நிலப்பட்ட வழங்க வாய்ப்பு ஏற்படுகிறது.
8. வருவாய் நிலஅளவையின் போது தீவை ஏற்படாத தரிசு என வகைப்படுத்தப்பட்ட நிலங்களில் அமைந்துள்ள பாறைகள் அல்லது சிறு குன்றுகள் ஆகியவற்றை கனிம சுரங்கங்களுக்கு பயன்படுத்த கனிம உரிமம் வழங்கி அரசின் வருவாயை அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகிறது.
9. வருவாய் நிலஅளவையின் போது இரயத்துவாரி புஞ்சை என வகைப்படுத்தப்பட்ட தனியாருக்கு சொந்தமான பட்டா நிலங்கள் அரசாங்கத்தின் சமூக, பொருளாதார அறிவியல் சார்ந்த வளர்ச்சித் திட்டங்களுக்கு தேவைப்படின் "நில எடுப்பு" விதி முறைகளுக்கு உட்பட்டு நிலத்தை கையகப்படுத்த வாய்ப்பு ஏற்படுகிறது.
10. எல்லாவற்றிக்கும் மேலாக நில உடமையாளர்களிடமிருந்து அரசானது நிலவரியை வசூலிக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

(C.S & L.R manual part – I, Chapter V, Page No: 15)

7) **ஒரு கிராமத்தை நிலஅளவை செய்யும் போது மேற்கொள்ளும் பணிகள்**

எ. பணி.. கிராமம் மற்றும் கண்டம் நிர்ணயம் செய்து கோண அளவை செய்வதற்கு எ.கற்கள் நடுவது.

பி. பணி.. கிராமம் மற்றும் கண்டம் எல்லைகளை தியோடலைட் கருவி கொண்டு சர்வே செய்வது.

சி. பணி.. கிராமம் மற்றும் கண்டம் உத்தேசப்படம் தயார் செய்ய தேவையான கோண அளவுகளை கணித முறைப்படி தயார் செய்தல்.

டி. பணி.. கிராமம் மற்றும் கண்டம் உத்தேச படம் தயார் செய்தல்.

இ. பணி.. இடம் காணும்பணி பணி செய்து சர்வே புலன்களை அமைத்து தேவையான இடங்களில் கற்கள் நடுவது.

எப். பணி.. சர்வே புலங்களை அளந்து படம் வரைந்து பரப்பு கணித்தல்

ஜி. பணி.. கிராம படம் தயார் செய்தல்.

எச். பணி.. கிராம படம் முடித்து பரப்பு கணித்தல்.

மேற்கண்ட ஏ, பி, இ மற்றும் எப் ஆகியன புலத்தில் செய்பவை. சி, டி, ஜி, எச் ஆகியன அலுவலகத்தில் செய்ய வேண்டியவை.

(C.S & L.R manual part – I, Chapter X, Page No: 61)

Verified RealEstate

8) **ஆரம்ப வருவாய் நிலஅளவை முடிவுற்ற பின்னர் பராமரிப்பு பணிக்காக வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வழங்கப்படும் ஆவணங்கள்**

1. FMB (Field Measurement Book), புலப்படச்சுவடி
2. Village Map, கிராம வரைபடம்
3. 'A' Register, 'அ' பதிவேடு
4. Chitta 10(1), சிட்டா 10(1)

மேற்கண்ட ஆவணங்களில் புலப்பட சுவடியும் (FMB), கிராம வரைபடமும் நிலஅளவைத் துறையினரால் தயாரிக்கப்படுகிறது. மற்ற இரண்டு ஆவணங்களான 'அ' பதிவேடு, சிட்டா 10(1) ஆகிய ஆவணங்கள் நிலவரித் திட்ட துறையினரால் தயாரிக்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் வருவாய் நிலஅளவையின் போது தயாரிக்கப்பட்டு பராமரிப்பு பணிக்காக வட்டாட்சியர் அலுவலகத்திற்கு இரண்டு நகல்கள் அனுப்பி வைக்கப்படுகிறது.

1. <u>புலப்படப் புத்தகம் - (Field Measurement Book)</u>

கிராமத்திலிருக்கும் அனைத்து சர்வே புலங்களின் வரைபடங்கள் ஒன்று சேர்ந்த தொகுப்பே புலப்படம் புத்தகம் எனப்படும். ஒவ்வொரு சர்வே புலத்திற்கும் தனித்தனி புலப்படம் உரிய உட்பிரிவுகளின் எல்லை, அளவுகள் குறிக்கப்பட்டிருக்கும். இப்புலத்தில் உள்ள வீடு, கிணறு, வாய்க்கால் போன்ற விளக்கிகளும் பதியப்பட்டிருக்கும். இந்த விளக்கிகளை F.M.B-யில் காண்பிப்பதால் பிற்காலத்தில் ஏற்படும் தாவாக்களை தீர்க்க இது முக்கிய சான்று ஆவணமாக அமையும். மேலும் புலங்களின் இருப்பிடங்களை தெரிந்து கொள்வதற்கும் சாகுபடி பதிவு செய்வதற்கும் பெரிதும் உதவுகிறது.

2. <u>கிராமப்படம் - (Village Map)</u>

கிராமத்தில் உள்ள அனைத்து சர்வே புலங்களின் கூட்டுப்படமாகும். புல எண் மற்றும் புலத்தின் எல்லைகளும் கிராம எல்லைகளும் வரையப்பட்டிருக்கும். இதில் உட்பிரிவுகள், அதன் அளவுகள் ஆகியன இருக்காது. விளக்கிகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டிருக்கும். இதனால் புலத்தணிக்கை செய்ய வரும் அலுவலர்களுக்கு சரியான இடம்தானா? என்பதை அடையாளம் தெரிந்து கொள்ள முடியும்.

3. <u>'அ' பதிவேடு: ('A' Register)</u>

'அ' பதிவேடு நிலவரித்திட்டத்துறையால் தயாரிக்கப்படுகிறது. இதில் ஒவ்வொரு புல எண் உட்பிரிவிற்கும் முந்தைய தொடர்பு விபரங்கள், வகைபாடு, மண் வயனம், விஸ்தீரணம் தீர்வை, பட்டா எண், உரிமையாளர் பெயர் மற்றும் குறிப்பு கலம் போன்றவை பதியப்பட்டிருக்கும். குறிப்பு கலத்தில் புறம்போக்கு நிலம் எனில் எந்த தன்மையான புறம்போக்கு என்பது பதியப்பட்டிருக்கும். நஞ்சை நிலம் ஆதாரமும் பதியப்பட்டிருக்கும். கிராமத்தின் அமைவிடம் மற்றும் கிராமம் பற்றிய விபரம் அனைத்தும் முன்பக்கத்தில் வரலாற்று குறிப்பாக சுருக்கமாக குறிக்கப்பட்டு இருக்கும். பொதுவாக ஒவ்வொரு வருவாய் புல உட்பிரிவுகளின் முழு விபரங்களும் பதியப்பட்டு இருக்கும்.

Verified by PeelEstate ™

4. சிட்டா: 10(1)

கிராமத்தில் உள்ள அனைத்து நில உரிமையாளர்களின் பெயர்களும் அகர வரிசைப்படி பட்டியலிட்டு (வரிசை எண் கொடுத்து) பட்டா எண் கொடுக்கப்பட்டு இருக்கும். அக்கிராமத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் இருக்கும் நஞ்சை / புஞ்சை நிலங்களின் அனைத்து புலங்கள் பற்றிய விவரமும் ஒரு பட்டா எண் கீழ் கொடுக்கப்பட்டு இருக்கும்.

(C.S & L.R manual part – I, Chapter XI, Page No: 65, 66, Rule: 1, 5(i), 5(ii), 5(iii))

9) **Survey Marks (நிலஅளவைக் குறிகள் வகைகள்)**

ஒரு கிராமத்தை நிலஅளவைப்பணி மேற்கொள்ளும் போது மூன்று கிராம எல்லைகள் சந்திக்கும் இடங்கள், இரண்டு கிராம எல்லைகள் சந்திக்கும் இடங்கள், கிராம எல்லையின் வளைவுகள், புல எல்லைகள், சிறு சுற்றுப்புல எல்லை (M.C Field) கண்ட (Khandam) எல்லை, அரசு புறம்போக்கு புல எல்லை / உட்பிரிவு எல்லை வளைவுகள் ஆகிய இடங்களில் நடப்படும் நிலஅளவை கற்களும், கற்கள் நடமுடியாத பாறை நிலப்பகுதியில் அப்பாறைகளின் மீது செதுக்கப்படும் அடையாளங்களும் நிலஅளவைத் துறையில் "நில அளவை குறிகள்" (Survey Marks) என அழைக்கப்படுகிறது.

நிலஅளவைக் குறிகள் இரண்டு வகைப்படும்.

I. முதல் வகைக் கற்கள் / 'அ' கற்கள்
First Class Stones / 'A' Stones
அளவு: 3' X 9" X 9" or 90 Cm X 22.5Cm X 225 Cm

II. இரண்டாம் வகை கற்கள் / 'ஆ' கற்கள் (or)
Second Class Stones / 'B' Stones
அளவு: 2' X 6" X 6" (or) 60Cm X 15Cm X 15Cm

கிராமத்தை சர்வே செய்யும் போது பயன்படுத்தப்படும் கற்கள்:

1. "அ" கல் / முதல்வகைக்கல்: ('A' Stone)

90 X 22.5 X 22.5 செ.மீ / 3' X 9" X 9'' நீளமுடையது. ஒரு பக்கத்தில் பெரிய அம்புக்குறி மேல் நோக்கி இருக்கும் "ஏ" - கல் கிராம முச்சந்திக்கு அடுத்த பை ஜங்சனிலும் நடப்படும். கிராம "முச்சந்தியில்" நடப்படும் கல்லின் மேல் புறம் △ குறியும், "பை" ஜங்சன் நடப்படும் கல்லின் தலையில் ⊥ குறியும் செதுக்கப்பட்டு இருக்கும். இந்த "பை" ஜங்சன்களுக்கு பாயின்டர் (Pointer) என்றும் பெயர்.

Verified © RedEstate™

2. <u>"ஆ" கல் / இரண்டாம் வகை கல்: ('B' Stone)</u>

60 X 15 X 15 செ.மீ / 2' X 6" X 6" அளவுடையது. ஒரு பக்கத்தில் அம்புக்குறி மேல் நோக்கி இருக்கும் இது புல முச்சந்தி, கிராம எல்லை வளைவுகள் மற்றும் கண்ட எல்லைகளில் நடப்படும். கிராம எல்லையின் வளைவுகளில் நடப்படும் கற்களின் தலையில் + மார்க்கும் கண்ட எல்லையில் நடப்படும் கல்லின் தலையில் சிறு குழியும் (Plummet Hole) குறிக்கப்பட்டு இருக்கும். அரசுக்கு சொந்தமான / அரசு புறம்போக்கு சர்வே புலங்களின் வளைவுகள் மற்றும் உட்பிரிவுகளில் நடப்படும் கல்லின் தலையில் எஸ் (S) அடையாளம் குறிக்கப்பட்டு இருக்கும். கல் நட வேண்டிய இடம் 'பாறை' எனில் ✧ (Rockmark) என்ற குறி செதுக்க வேண்டும். இக்குறிகளை வரைபடத்தில் அதற்குரிய இடத்தில் பதிவு செய்ய வேண்டும்.

(C.S & L.R manual part – I, Chapter V, Page No: 16)

நகர அளவையில் பயன்படுத்தப்படும் கற்கள்:

1) 90 X 22.5 X 22.5 செ.மீ அளவுள்ள ஏ-கற்களை நகராட்சி எல்லையிலும், ஓப்பன்பிளாக் (Open Block) எல்லைகளிலும் நடப்பட வேண்டும்.
2) 45.0 X 20.0 X 20.0 செ.மீ அளவுள்ள ஏ – கற்கள் தலையில் பிளமிட் (Plummet Hole) துளை இட்டு இதனை 3 அல்லது 4 தெருக்கள் சந்திக்கும் இடங்களிலும், குளோஸ் பிளாக் (Close Block) மற்றும் மீடியம் பிளாக் (Medium Block)களிலும் பூமிக்கடியில் அரையடி ஆழத்தில் நடப்பட வேண்டும். இதனை அறிய டைலைன் புத்தகம் தயார் செய்யப்பட வேண்டும்.
3) 60 X 15 X 15 செ.மீ அளவுள்ள B கற்களை ஒவ்வொரு சர்வே புல டி.எஸ்.எண் (T.S.No) முச்சந்தியிலும் நடப்பட வேண்டும். நிலையான கட்டிடங்கள், வளைவுகளில் கற்கள் நட வேண்டியதில்லை. அங்கு தார் மார்க் இட்டால் போதும், அரசு மற்றும் நகராட்சிக்கு சொந்தமான நிலங்களின் வளைவுகளிலும் இவ்வகை கற்கள் நடப்பட வேண்டும்.
4) 30 X 15 X 15 செ.மீ கற்கள் கோண அளவு கற்களுக்கு இடையில் சங்கிலி கோட்டில் பூமிக்கடியில் நடப்பட வேண்டும். இதற்கு Chain Survey Stone எனப்படும்.

(T.N. Survey manual Volume – I, Chapter XIII, Page No: 68, 69)

10) நிலஅளவை முறையின் வகைகள் யாவை? அதில் எந்தமுறை சிறந்தது, சாதாரண முக்கோண முறைக்கும், மூலைவிட்ட முக்கோண முறைக்கும் உள்ள வேறுபாடு

நிலஅளவை முறையின் வகைகள்:

1) கசரா முறை
2) சாதாரண முக்கோண நிலஅளவை முறை
3) பிளாக் மேப் முறை
4) பிளேன் டேபிள் முறை
5) தியோடலைட், பிரஸ்மேட்டிக் காம்பஸ் மற்றும் பிளேன் டேபிள் முறை

Verified PedEstate

6) கள்ளிகோட் மற்றும் அட்டகடா முறை
7) புங்கனூர் முறை
8) ரே முறை
9) மூலைவிட்ட முக்கோண குத்தளவு முறை

தற்போது தமிழ்நாட்டில் மூலைவிட்ட முக்கோண குத்தளவு முறையில் அளவுகள் செய்யப்படுகின்றன. மேலும் சாதாரண முக்கோண முறையிலும் அளவுகள் செய்யப்பட்டுள்ளன. இதில் மூலைவிட்ட முக்கோண ஆப்செட் முறையே சிறந்தது என அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

(T.N. Survey manual Volume – I, Appendix II, Page No: 166)

சாதாரண முக்கோண முறை	மூலைவிட்ட முக்கோண குத்தளவு முறை
1) இந்த முறையில் புலத்தின் பக்கங்களைக் கொண்டு இணைத்து பல சிறு முக்கோணங்களாக ஏற்படுத்தப்படுகின்றன.	1) மூலைவிட்ட குத்தளவு முறையில் புல முச்சந்திகள் மட்டும் இணைத்து பெரிய ஒழுங்கான முக்கோணம் அமைத்து வளைவுகளுக்கு மட்டும் ஆப்செட் எடுக்கப்பட்டு படம் வரையப்படுகிறது.
2) சாதாரண முறையில் பல சிறு முக்கோணங்கள் இருப்பதால் படம் வரைய அதிக நேரம் தேவைப்படுகிறது. மேலும் சரியான உருவம் கிடைக்காது.	2) மூலைவிட்ட முக்கோண குத்தளவு முறையில் பெரிய முக்கோணம் அமைத்து எளிதில் படம் வரையலாம். சரியான உருவம் கிடைக்கும்.
3) இம்முறையில் ஒவ்வொரு வளைவிற்கும் 'ஜி' லைன் இணைப்பதால் ஒவ்வொரு வளைவிற்கும் கல் நட வேண்டும். இதனால் கல் அதிகம் தேவைப்படும்.	3) இம்முறையில் முச்சந்தியில் மட்டும் 'ஜி' லைன் இணைப்பதால் முச்சந்தியில் மட்டும் கல் நட்டால் போதும். எனவே கல் மிகக் குறைந்த அளவே தேவைப்படும்.
4) இம்முறையில் கணித முறையில் புலத்தின் விஸ்தீரணம் காணுவது கடினம்	4) இம்முறையில் எளிதாக கணித முறையில் பரப்பைக் காணலாம்.
5) இம்முறையில் இரண்டு புலன்கள் அளக்கும் போது திரும்பவும் அளக்க வேண்டும்	5) இம்முறையில் எல்லையில் இரண்டு புலங்களுக்கு பொதுவான ஒரே முறை மட்டும் அளக்கப்படுகிறது.

Verified © RedEstate ™

6) இம்முறையில் ஒவ்வொரு புலத்திற்கும் பக்கங்களாக கொண்டு முக்கோணம் அமைக்கப்படுவதால் பக்கத்து புலத்திற்கு அது பயன் இல்லாமல் போகிறது	6) இம்முறையில் இருபுலங்களுக்கும் ஒரே எல்லை இருக்குமானால் ஒரு புல எல்லை மட்டும் அளந்து அடுத்து முக்கோணத்திற்கு அதே அளவினை பயன்படுத்தலாம்.
7) இம்முறையில் ஆப்செட் முறை இல்லாததால் அளந்த அளவுகள் சரிதானா? என்பதை சரி பார்க்க இயலாது.	7) இம்முறையில் நேர்கோண முறையில் அளந்த அளவுகள் சரி பார்க்க இயலும்.
8) சாதாரண முறையில் நேரமும், செலவும் அதிகம்	8) இம்முறையில் நேரமும், செலவும் குறைவு.

(C.S & L.R manual part – I, Chapter VI, Page No: 20, 21, 23, 24)

11) **நில அளவை துறையில் உள்ள நிலஅளவை திட்டங்கள்**

1. முதன்மை அளவை – (Initial Survey)

1. கிராமத்தினை முதன் முதலில் அளவை செய்யும்போது அவை முதன்மை நிலஅளவை எனப்படும். புதிதாக சர்வே செய்யும் புலங்களை ஏற்படுத்தி எப்.எம்.பி., "அ" பதிவேடு, கிராமப்படம், சிட்டா முதலியன தயாரிக்கப்படுகின்றன.

2. மறுநிலஅளவை – (Re-Survey):

ஏற்கனவே, சர்வே செய்யப்பட்டுள்ள ஒரு கிராமம், வட்டம், மாவட்டம் ஆகியவற்றில் இயற்கை இடர்பாட்டினாலும், காலப்போக்கில் புலங்களின் பதிவுகளில் 60% மாறுதல் ஏற்பட்டாலும் புலங்களின் எல்லைகளில் 40% மாறுதல் ஏற்பட்டாலும் (உ.ம்) பூமியில் உள்ள வரப்புகள், எப்.எம்.பி –க்கு ஒத்துவராமல் மாறுதலாக இருக்குமானாலும் அதில் புதிய நீர்பாசன திட்டம் கொண்டுவரும் போது மாறுதல் செய்ய வேண்டி இருந்தாலும் அப்பகுதியினை மறுநில அளவை செய்ய வேண்டும் என்பது அரசின் கொள்கை கோட்பாடாகும். இதில் ஏற்கனவே உள்ள புல எல்லை அமைப்பை கருத்தில் கொள்ளாமல் புலத்தில் உள்ளது உள்ளவாறு புதிய சர்வே புலன்களாக மறுநிலஅளவையில் மாற்றி அமைக்கப்படும். ஆதனால் புதிதாக புலப்படம், கிராமப்படம், 'அ' பதிவேடு தயாரிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. புறம்போக்கு போன்ற அரசின் நிலங்களில் மறுநில அளவை செய்யும்போது, பழைய அளவையை நிலைப்படுத்தி அப்படியே அளவை செய்ய வேண்டும். மறுநில அளவை செய்யும் போது சர்வே மற்றும் புல எல்லைகள் குறித்த சட்டம் VIII/1923-ன்படி சர்வே செய்ய வேண்டும்.

Verified by RedEstate

3. துணை நிலஅளவை – (Supplemental Survey):

ஏற்கனவே உள்ள புலங்களின் எல்லையை மாற்றாமல் அமைப்பினை அப்படியே வைத்துக்கொண்டு ஒவ்வொரு சர்வே புலத்தினுள் பிரிக்க வேண்டிய புதிய உட்பிரிவுகள் அளப்பது மற்றும் தற்போதைய உரிமையாளர்களின் பெயரில் மாற்றம் செய்வது, காணாமல் போன கற்களை புதுப்பிப்பது, புதிய விளக்கிகளை அளப்பது போன்ற பணிகள் அடங்கும். இதற்கு புதிய எப்.எம்.பி., கிராமப்படம், "அ" பதிவேடு, தயார் செய்ய வேண்டியதில்லை. ஏற்கனவே எப்.எம்.பி-ல் உள்ள வீடு, கிணறு போன்றவை தற்சமயம் இல்லை என்றால் அவைகளை எப்.எம்.பி-ல் நீக்க வேண்டும். பாய்ச்சல் ஆதாரமுள்ள வாய்க்கால், நடைபாதை இவைகள் இல்லை எனில் மேலதிகாரிகளின் ஆணைபெற்ற பின்பே நீக்க வேண்டும். மேலும் ஏற்கனவே சர்வே செய்யப்பட்டு 30 வருடங்கள் மேலாகியும் 75% கற்களும் குறைவாக கற்கள் காணாமல் போய் இருந்தாலும் துணை நில.அளவை செய்ய வேண்டும்.

(T.N. Survey manual Volume– I, Chapter I, Page No: 1,
Chapter X, Page No: 53, Chapter XV, XVI, Page No: 100, 110)

12) தமிழ்நாடு நிலஅளவை மற்றும் எல்லைகள் சட்டம் பிரிவு

பிரிவு 5:

ஒரு இடத்தை சர்வே செய்ய அதிகாரம் அளிக்கப்பட்ட விவரத்தினை தமிழ்நாடு அரசிதழ், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்படவேண்டும்.

பிரிவு 6(1):

சட்டப்பிரிவு 5-ன்படி நியமிக்கப்பட்ட சர்வே அதிகாரி அவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை வைத்து அவரே சர்வே செய்யும் இடத்தைப்பற்றி அவ்விடத்தின் சம்மந்தப்பட்டவர்களின் நலனுக்காக அந்த மாவட்டத்தில் வட்டார மொழியில் 2 முறை பிரசுரம் செய்ய வேண்டும். அதில் நில உரிமயாளர்களோ அல்லது அவரின் பிரதிநிதிகளோ சர்வே அதிகாரி அழைக்கும்போது இடத்தினை காண்பிக்க வேண்டும். இதனை தண்டோரா மூலம் / பிரசுரத்தின் நகலை கிராம சாவடியில் ஒட்டியும் விளம்பரம் செய்ய வேண்டும். சர்வே செய்யும் போது 6(1)-ல் கையொப்பம் வாங்க வேண்டும்.

பிரிவு 8(1):

இப்பிரிவின்படி நிலத்தை அளப்பதற்கான சர்வே கற்களின் கிரையத்தொகை கூலி ஆகிய மொத்தத் தொகையை நில உரிமையாளரிகளிடமிருந்தும் அரசின் சம்மந்தப்பட்ட துறையிடமிருந்தும் நிலத்தின் அளவுக்கு ஏற்றவாறு விகிதாசாரப்படி வசூல் செய்ய நோட்டீஸ் அனுப்பவேண்டும். இதனை கிராம நிர்வாக அலுவலர் வரி வசூலுடன் சேர்த்து வசூல் செய்ய வேண்டும்.

Verified RealEstate

பிரிவு 9(1):

சர்வே முடிந்தவுடன் நிலங்களின் எல்லைகள் சரியாக நிர்ணயம் செய்யப்பட்டு அளக்கப்பட்டுள்ளன என்றும் தனக்கு எல்லைப்பற்றிய எவ்வித தாவாவும் இல்லை என்று துணை ஆய்வாளர் (Deputy Inspector of Survey and L.R) அந்தஸ்தில் உள்ள ஒருவர் தீர்மானம் செய்ய வேண்டும். இது சட்டபூர்வமான தீர்மானமாகும்.

பிரிவு 9(2):

9(1) தீர்மானத்தை ஒரு நோட்டீஸ் மூலம் அனைத்து பட்டாதாரர் மற்றும் அரசின் உரிய துறைக்கு தெரிவித்து சார்வு செய்ய வேண்டும். இதுவே 9(2) எனப்படும். இந்த 9(2) நோட்டீஸ்-ல் அந்த நபருக்குரிய புல எண்கள் விஸ்தீரண விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கும். மேலும் இந்த நோட்டீஸ் வரப்பெற்ற ஒரு மாத காலத்திற்குள் எல்லை அளவில் குறை இருந்தால் மேல்முறையீடு செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கும். மேலும் புலப்படம் தேவையானால் ஒரு புலத்திற்கு ரூ.200/- வீதம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கும். அரசிற்கு சொந்தமான புலத்திற்கு சம்மந்தப்பட்ட அரசுத்துறைக்கு 9(2) நோட்டீஸ் சார்வு செய்ய வேண்டும். இந்த நோட்டீஸை பட்டாதாரர்களுக்கும் உரிய அரசுத்துறைக்கும் நேரிடையாக சார்வு செய்து உரிய படிவத்தில் ஒப்பம் பெறப்பட வேண்டும்.

பிரிவு 10(2):

10(1)-ன் தீர்ப்பை அவர் கைப்பட எழுதி சம்மந்தப்பட்ட மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும். அதற்குரிய படிவத்தில் எழுதிட வேண்டும். அதில் அவர் இந்த தீர்ப்பின் மீது மேல்முறையீடு இருந்தால் ஒரு மாதத்திற்குள் மேல்முறையீடு செய்து கொள்ள வேண்டும் என்று தெரிவிக்க வேண்டும்.

பிரிவு 13:

இது இறுதி விளம்பரம் எனப்படும். 9(2) நோட்டீஸ் சார்வு செய்து 3-மாதம் கழித்து மாவட்ட அரசிதழில் கிராமம் சர்வே செய்து முடிந்து விட்டது எனவும், எல்லை, அளவு பற்றி குறை இருப்பின் இந்த இறுதி விளம்பரம் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்த தேதியிலிருந்து 3-வருட காலத்திற்குள் சிவில் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிகொள்ளலாம் என்றும் இந்த விளம்பரத்தில் தெரிவிக்கப்பட வேண்டும். இதன் நகல் ஒன்றை கிராமத்தில் பொது இடத்தில் ஒட்டியும், தண்டோரா மூலமும் விளம்பரம் செய்ய வேண்டும்.

பிரிவு 15(1):

ஒவ்வொரு நில உரிமையாளர்களும் அவசியம் சர்வே கற்களை பராமரிக்க வேண்டும். சர்வேயின் போது நடப்படும் கற்களை பராமரிப்பது அந்த கல்லைத் தொட்டுக்கொண்டிருக்கும் புலங்களின் பட்டாதாரர்களின் கூட்டுப்பொறுப்பாகும். கற்கள் காணவில்லையெனில் அவர்களே அந்த சர்வே கற்களை சொந்த செலவில் கிராம நிர்வாக அலுவலரின் உதவியுடன் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

Verified RealEstate™

பிரிவு 15(2):

சர்வேயின் போது நடப்படும் கற்களை பராமரிப்பது அந்த கல்லைத் தொட்டுக்கொண்டு இருக்கும் புலங்களுடைய பட்டாதாரர்களின் கூட்டுப்பொறுப்பாகும் என்று பிரிவு 15(1)-ன்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி சர்வேயின் போது நடப்பட்டுள்ள கற்கள் காணாமல் போனால் அதை புதுப்பிக்கும்படி சம்பந்தப்பட்ட பட்டாதாரர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது. இந்த நோட்டீஸ் 15(2) எனப்படும். இந்த நோட்டீஸ் கொடுத்த 15 தினங்களுக்குள் கிராம நிருவாக அலுவலருடன் பட்டாதாரர் முன்னிலையில் அந்த கல்லைப் புதுப்பிக்க வேண்டும். இதற்கு இரயத்துவாரி புதுப்பித்தல் எனப்படும். தவறினால் நிலஅளவரால் அதனை புதுப்பித்து (Surveyor Renewal) கல் கிரயம், கூலி ஆகியவை சம்பந்தப்பட்ட பட்டாதாரர்களிடமிருந்து வசூல் செய்ய இப்பிரிவு வகை செய்கிறது.

பிரிவு 22:

இதன்படி கிராமத்தில் சர்வே செய்யும் போது சர்வே அலுவலர்கள் எந்த இடத்திலும் நுழைந்து சென்று அளவுகள் எடுக்கவும், அந்த இடத்தை சர்வே செய்யும் போது மரம், செடி, வேலிகள் தடைபட்டால் அவற்றை அகற்றவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(T.N. Survey manual Volume – I, Appendix I, Chapter- II,
Page No: 128, 129, 130, 131, 133, 134)

13) **வட்ட அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வட்ட கணக்கு 4, 5, 6, 7, 8A**

கிராமத்தில் பலவித காரணங்களினால் பூமியில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. அவைகளை எல்லாம் கண்காணித்து வருவாய் மற்றும் சர்வே ஆவணங்களில் பதிவு செய்யும் பொருட்டு வட்ட அலுவலகத்தில் கீழ்க்கண்ட கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன.

வட்ட கணக்கு எண் -4 (தர்காஸ்து பதிவேடு)

தரிசு என்று "அ" பதிவேட்டில் பதியப்பட்டுள்ள சர்வே புலங்களை நில ஒப்படை செய்யகோரி வரும் விண்ணப்பங்களை இந்த 4-ம் எண். பதிவேட்டில் பதிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு "தர்காஸ்து பதிவேடு" என்று பெயர். இது பசலி ஆண்டில் பராமரிக்கப்பட வேண்டும்.

வட்ட கணக்கு எண். 5 (உரிமைவிடல் பதிவேடு)

ஏதோ ஒரு காரணத்தினால் தன் நிலத்தின் மீது தனக்குள்ள உரிமையை தானமாக விட்டுவிடுகிறேன் என கோரி வரும் விண்ணப்பங்களை இந்த பதிவேட்டில் (Reliquishment Register) பதிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். (உ.ம்) வெள்ளத்தினால் அடித்து செல்லப்பட்ட நிலத்தின் உரிமையை விட்டுவிடல் போன்றவை. இது பசலி ஆண்டில் பராமரிக்கப்பட வேண்டும்.

Verified RedEstate™

வட்ட கணக்கு எண். 6

இது ஏப்ரல் - மார்ச் முடிய நிதி ஆண்டில் பராமரிக்கப்படுகிறது. இது 6(1), 6(2) என இரு பகுதிகளாக வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட வேண்டும். 6(1) மனுக்கள் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெறப்படும் பட்டா மாறுதல் நமுனாக்கள் நேரடியாக பதிந்து நடவடிக்கை தொடர வேண்டும். 6(2)வானது பட்டாதாரர்களிடமிருந்து நேரடியாக பெறப்படும் விண்ணப்பங்களை பதிந்து நடவடிக்கை தொடர வேண்டும்.

வட்ட கணக்கு எண். 7 (Changes Register For Classification) வகைபாடு மாற்றம் பதிவேடு

சர்வே புலத்தின் வகைப்பாடு மாற்றம் தொடர்பான விவரம் இந்த பதிவேட்டில் பதியப்படுகிறது. இது பசலி ஆண்டில் பராமரிக்கப்படவேண்டும். வருவாய்த்துறை உதவியாளரின் தன் பதிவேட்டில் வகைபாடு மாற்றத்திற்கு நடவடிக்கை எடுத்து உத்திரவு பெற்ற பின்பு தான் இந்த 7-ம் எண். பதிவேட்டில் பதிந்து கிராம வட்ட கணக்குகளில் மாறுதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வட்ட கணக்கு எண். 8ஏ

இது பசலி ஆண்டில் பராமரிக்கப்படும் ஒரு முக்கியமான பதிவேடாகும். வட்ட கணக்கு எண் 4, 5, 6, 7 ஆகியன நேரடியாக பதிந்து நடவடிக்கை தொடரலாம். ஆனால் இதில் அப்படி செய்ய முடியாது. முழுபுலம், முழு உட்பிரிவு சம்மந்தமாக 4, 5, 6, 7-ல் பதிந்து கிராம வட்டக் கணக்கில் உரியமாறுதல் செய்து நடவடிக்கை தொடர வேண்டும். புதிய புலம், புதிய உட்பிரிவு விஷயத்தில் அந்த உட்பிரிவு ஆவணங்களை 8ஏ - எண் கொடுத்த பின்தான் கிராம மற்றும் வட்ட கணக்கில் உரிய திருத்தங்கள் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். 6-ம் எண் பதிவேடு மூலம் வரும் பட்டா மாற்றம் 8ஏ - கோப்பின்படி தவிர இதர 8ஏ - கோப்புக்களை கிராம மற்றும் வட்டகணக்குகளில் மாறுதல் செய்த பின் சம்பந்தப்பட்ட 4, 5, 7 பிரிவிலேயே திரும்பக் கொடுத்துவிட வேண்டும். இந்த 8ஏ - கோப்பினை 4, 5, 7 - பகுதிக்கு ஒன்றுடன் ஒன்றிணைத்து வைக்க வேண்டும். 6-ம் பதிவேடு மூலம் வரும் 8ஏ- கோப்புகளை நிலஅளவை பிரிவிலேயே முடிவு செய்ய வேண்டும். பிரதி மாதம் இப்பட்டியலில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் நகல் எடுத்து சம்பந்தப்பட்ட சார்பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்.

(C.S & L.R manual Part – I, Chapter - XI, Page No: 65 & 73)

14) நத்தம் மனை பட்டாவில் உட்பிரிவு செய்து தரக்கோரி பெறப்படும் மனு மீது வட்ட அலுவலகத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள்

ஒரு பட்டாதாரர் புதிய உட்பிரிவு செய்து தனி பட்டா வழங்ககோரி வட்டாட்சியருக்கு விண்ணப்பிக்க விண்ணப்பத்தின் முன் பக்கத்தில் நீதிமன்ற Court Fee Stamp / - Or 2 /- ஒட்ட வேண்டும். ஒரு உட்பிரிவுக்கு ரூ.400 வீதம் செலுத்தி செலுத்துச்சீட்டு, பட்டா மாறுதல் செய்ய வேண்டிய இடத்தின் பத்திர ஆதாரங்கள் இவற்றை மனுவுடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். நகர்புறமாக இருப்பின் உட்பிரிவுக்கட்டணம் ரூ.500 செலுத்த வேண்டும்.

Verified by RealEstate™

மாநகராட்சியாக இருப்பின் ரூ.600/- வீதம் செலுத்த வேண்டும். அம்மனுவினை வட்ட 6(2) பதிவேட்டில் பதிந்து குறு வட்ட அளவருக்கு உட்பிரிவு ஆவணங்கள் தயாரித்து அனுப்புமாறு கோர வேண்டும். குறுவட்ட அளவர் கிராம நிர்வாக அலுவலர் மூலம் மனுதாரருக்கு தகவல் அனுப்பி குறிப்பிட்ட நாளில் கிராமத்திற்கு சென்று நிலத்தில் உள்ள அனுபவப்படி தேவையான அளவுகளை அளந்து ஒரு வரைபடம் தயார் செய்ய வேண்டும். அதில் புதிய உட்பிரிவு எல்லை அளவுகள் சிவப்பு மையினால் வரைந்து அதில் தேவையான சான்றுகளையும் வழங்க வேண்டும். ஒரு உட்பிரிவு நமுனாவையும் தயார் செய்து மனுதாரரிடம் ஒப்பம் பெற வேண்டும். கிராம "அ" பதிவேட்டின் நகல், சிட்டா, அடங்கல் நகல், கிராம நிர்வாக அலுவலரின் வாக்குமூலத்துடன் தன்னுடைய அறிக்கையையும் இணைத்து கோப்பினை வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும். வட்ட அலுவலகத்திற்கு வரப்பெற்ற கோப்பினை வட்ட துணை ஆய்வாளருக்கு அனுப்பி கூராய்வு செய்ய வேண்டும். பின் வட்டாட்சியரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற வேண்டும். வட்டாட்சியர் புலப்படம், உட்பிரிவு நமுனாவில் அங்கீகரிக்கும் உத்திரவினை பதிந்து முழு ஒப்பம் செய்வதுடன், தனியாக உத்திரவினையும் வழங்க வேண்டும். இதனை வட்டக்கணக்கு 6(2)-ன் கடைசிக் கலத்தில் தொடர்புடைய 8ஏ- எண்ணை குறிக்க வேண்டும். 8ஏ - எண் வழங்கப்பட்ட கோப்பினை மீண்டும் குறுவட்ட அளவருக்கு அனுப்பி கிராமக் கணக்குகளில் திருத்தங்கள் செய்ய கோர வேண்டும். குறுவட்ட அளவர் கிராமத்தில் கீழ்க்கண்ட கணக்குகளில் மாறுதல் செய்ய வேண்டும். 1. கிராம மாறுதல் பதிவேடு (கிராமக் கணக்கு எண் 3) 2. எப்.எம்.பி. 3. "அ" பதிவேடு 4. சிட்டா 5. அடங்கல் 6. கல் பதிவேடு (கலம் 2) குறுவட்ட அளவர் கிராமக்கணக்கில் திருத்தப்பட்டதற்கான சான்றுடன் கோப்பினை வட்டாட்சியருக்கு அனுப்பிய பின்பு வட்ட துணை ஆய்வாளரின் உத்தரவினால் வட்ட வரைவாளரைக் கொண்டு வட்ட அலுவலகத்தில் உள்ள எப்.எம்.பி., "அ" பதிவேடு, சிட்டா இவைகளில் தேவையான மாறுதல்கள் செய்ய வேண்டும். வட்ட எப்.எம்.பி - ல் திருத்தப்பட்டவைகளுக்கு வட்ட வரைவாளர் முழு உத்திரவினை எழுதி முழு ஒப்பம் செய்ய வேண்டும். ஆனால், "அ" பதிவேடு, சிட்டாக்களில் திருத்தப்பட்டதற்கு தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் / துணை ஆய்வாளர் ஒப்புதல் பெற வேண்டும். பின்பு கிராம, வட்டக்கணக்குகளில் மாறுதல் செய்த விபரம் பதிவு செய்யப்பட்டு கோப்பினை 8எ – பிரிவிலேயே முடிவு செய்து, நிரந்தர முடிவில் (R.Dis) கோப்பு பராமரிக்க வட்ட ஆவண காப்பக எழுத்தரிடம் ஒப்படைத்து 8ஏ பதிவேட்டில் ஒப்பம் பெறப்பட வேண்டும்.

15) **"Tie Line" அல்லது முடிச்சு அளவு அல்லது கற்காண் கோடுகள்**

தெரு அளவை மற்றும் நகர அளவையின் போது ஒன்றுக்கு மேற்பட்ட தெருக்கள் சந்திக்கும் இடங்களில் (நகர) Theodolite கற்கள் பூமிக்கு கீழ் கண்களுக்கு எளிதில் தெரியா வண்ணம் புதைக்கப்படுகிறது. இக்கற்களை எதிர்காலத்தில் எளிதில் கண்டறிவதற்காக கற்கள் நடப்பட்ட இடத்திற்கு மிக அருகில் அமைந்துள்ள நிரந்தரமான அமைப்புகளாகிய வீட்டு சுவற்றின் மூலை, சுற்றுச்சுவரின் மூலை, மின் கம்பம், தொலைபேசி கம்பம் ஆகியவற்றில் இருந்து, குறைந்த பட்சம் மூன்று வெவ்வேறு திசைகளில் இருந்து, கல்லின் மேற்புறத்தில்

Verified Real Estate

செதுக்கப்பட்டிருக்கும் துளைக்கு (Plummet hole) சென்டிமீட்டர் துல்லியமாக அளவுகள் எடுக்கப்பட்டு பதிவு செய்யப்படுவதையே நிலஅளவைத் துறையில் "Tie Line (or) முடிச்சு அளவு (or) கற்காண் கோடுகள் என அழைக்கப்படுகிறது.

